யெல்லாம் விவர அறிக்கையில் 21-4-90ல் முடியும் என்று வாரியம் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பணிகள் முடிந்ததாகத் தெரியவில்லை. சாலை செப்பனிடும் பணியும் தொடங்கப்படவில்லை. இதனால் பொது மக்களும் அப்பகுதி வியாபாரிகளும் மிகுந்த தொல்லைக்கு உள்ளாகி யிருக்கிறார்கள். எனவே அந்த வேலையை விரைவாக முடிக்க அமைச்சர் அவர்கள் நேரடியாக பார்வையிட்டு, நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். அத்துடன் இந்த மழையில் ரெட்டேரி மற்றும் கொரட்டூர் ஏரியிலிருந்து நிரம்பி வழியும் வெள்ளம், பாபா நகர் போன்ற பகுதிகளை இடுப் பளவுக்கு மூழ்கடித்துள்ளது. இந்த வெள்ளம் வடிவதற்கு எந்த ஏற்பாடும் இல்லை. மழை முடிந்து பல மாதங்கள் ஆனாலும் அந்த நிலை இருப்பதால் இது சரி செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகள் 21-4-1990-ல் முடிவடையும் என்று சொல்லியிருப்பது அங்கே குழாய்கள் அமைப்பதற்கான பணிகளும் அதைச் சார்ந்திருக்கிற மற்ற பணிகளும் தான். இப்போது இந்தப் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற சாலைகளைச் செப்பனிடுகிற பணிகள் எல்லாம் இதில் அடங்காது. அந்தப் பணிகளைச் செய்ய வேண் டிய பொறுப்பு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இல்லை என்பதை உறுப்பினரே அறிவார். வெள்ள நீர் என்று சொல்லும் போது, அது குடிநீர் வடிகால் வாரியத்திடம் வருவதில்லை. சாக்கடை நீர் சுத்தப்படுத்துகிற பணிகள் மட்டுமே அந்த வாரியத்திடம் இருக்கிறது. இந்தப் பணிகளால் ஏற்பட்டிருக் கின்ற சாலைகளின் பிளவுகளை எல்லாம் செப்பனிட உடனடி யாக நிவாரணம் அளிக்கப்பட்டு அந்தப் பணிகள் முடிவடைய இருக்கின்றன என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

பொதுவாழ்வினர் நேர்மைப் பாதுகாப்பு மன்றச் சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவாழ்வினர் நேர்மைப் பாதுகாப்பு மன்றச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, **நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.**

[1990 மே 11

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச் சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ,)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10–55 மணி

8. சட்ட முன்வடிவுகள்—(ஆய்வு செய்தல்).

(அ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏதேனும் முன்னுரையாகக் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தங்கள் அனுமதியுடன் இந்த சட்டமுன்வடிவு குறித்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்திலே கலந்துகொள்வதற்குத் துணையாக சில கருத்துக்களை எடுத்துக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 1989ஆம் ஆண்டு மீண்டும் கழக ஆட்சி அமைந்த பிறகு

* 9–5–1990ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.